[2021 பிப்ரவரி 25

(ஆ) விருதுநகர் மாவட்டம், பட்டாசு ஆலையில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விருதுநகர் மாவட்டம், அச்சன்குளத்தில் 12–2–2021 அன்று பட்டாசு ஆலையில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக உயிரிழப்புகள் நிகழ்ந்தது குறித்தும், பலர் காயமடைந்தது குறித்தும் இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், பட்டாசு வெடி விபத்து நடந்த பகுதியில் மீட்புப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு, காயமடைந்தோருக்கு உயரிய சிகிச்சை அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இவ்வெடி விபத்தில் உயிரிழந்தவர்களை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்வதோடு, காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்கள் விரைவில் குணமடைய வேண்டுமென்ற விழைவையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

(இ) உத்தரகாண்ட் மாநிலம், பனிப்பாறை உடைந்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் உயிரிழந்தவர்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உத்தரகாண்ட் மாநிலத்தில் 7–2–2021 அன்று பனிப்பாறை உடைந்ததன் காரணமாக, சமோலி மாவட்டத்தில் அலக்நந்தா மற்றும் தவுலிகங்கா ஆகிய நதிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் மனித உயிரிழப்புகள் ஏற்பட்டது மற்றும் பலர் படுகாயமடைந்துள்ள செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இந்த இயற்கைப் பேரழிவால் தங்களது இன்னுயிரை இழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதோடு, படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்கள் விரைவில்